DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

------------------------------------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDL. DIST. & SESSIONS JUDGE, MADURAI

**S.C. 386/2020 P.W.2**

DEPOSITION OF WITNESS FOR: PROSECUTION DEFENCE COURT

NAME : திருமதி.சுகந்தி

HUSBAND NAME : கல்லானை

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE : 55

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **04.08.2026.**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேலமடை, விநாயகநகரில் குடியிருக்கிறேன். நான் வீட்டு வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மகனாவார். இவ்வழக்கில் இறந்து போன கல்லானை எனது கணவர் ஆவார். எனது கணவர் தினமும் குடித்துவிட்டு, தடுமாறி கீழே விழுந்து வருவார். கடந்த 2020 ஆண்டு ஒரு நாள் எனது கணவர் குடித்துவிட்டு வந்தவர், எங்கள் வீட்டிற்கு முன்பு வாசலில் கல்லாகக் கிடந்த இடத்தில் மல்லாக்க கீழே விழுந்துவிட்டார். அதில் அவருக்கு பின்னந்தலையில் அடிபட்டது. நான் அழுது கொண்டிருந்தேன். எனது மகன் வீட்டிற்கு வண்டி ஓட்டி வந்தார். எனது மகனுக்கு என்ன நடந்தது என்று தெரியாது. எனது கணவர் கீழே விழுந்தவர் அப்படியே மயக்கமாகி விட்டார். ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி அவரை மதுரை இராசாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். மருத்துவர் அங்கு பரிசோதித்துவிட்டு எனது கணவர் இறந்துவிட்டதாகச் சொன்னார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும் அந்த விசாரணையில் 03.02.2020 அன்று இரவு 08.00 மணியளவில் நானும், எனது மாமியாவும் வீட்டு வாசலில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது குடித்துவிட்டு வந்த எனது கணவர் என்னிடம் தேவையில்லாமல் அசிங்கமாக பேசி என்னை அடித்துவிட்டார் என்றும் நானும் பொறுத்துக்கொண்டிருந்தேன் என்றும் எனது மாமியார் அவரை சத்தம் போட்டார் என்றும் பிறகு சிறிது நேரம் பேசாமல் இருந்தவர் மீண்டும் இரவு 09.00 மணிக்கு என்னை திட்டிக்கொண்டே சண்டையிட்டார் என்றும் நான் உடனே எதிரிக்கு போன் செய்து எனது கணவர் சண்டையிடும் விசயத்தை சொன்னேன் என்றும் எதிரி வேலையை முடித்துவிட்டு வந்துவிடுவதாக கூறினார் என்றும் உடனே எனது கணவர் வீட்டை விட்டு கிளம்பி வெளியே சென்று விட்டார் என்றும் எனது மாமியாரும் வீட்டிற்குள் சென்று படுத்துவிட்டார் என்றும் அதன் பின் இரவு 10.45 மணியளவில் திரும்ப வீட்டிற்கு வந்த எனது கணவர் வாசலில் இருந்த என்னை சேலையைப் பிடித்து இழுத்தார் என்றும் அப்போது வீட்டிற்கு வந்த எதிரி எனது கணவர் என்னை அடிப்பதைப்பார்த்து எனது கணவரை பிடித்து எனது வீட்டின் வாசலின் முன்பு தள்ளிவிட்டு பக்கத்தில் இருந்த பெரிய பாறாங்கல்லை எடுத்து எனது கணவரின் தலையில் போட்டார் என்றும் அப்படியே அவரது தலை நசுங்கி இரத்தம் வந்தது என்றும் எனது மாமியாரும் சத்தம் கேட்டு வெளியே வந்து கத்தினார் என்றும் நான் பயத்தில் அழறி சத்தம் போட்டேன் என்றும் மானகிரியில் இருக்கிற எனது உறவுகக்காரர்களிடம் சொல்வதற்கு ஓடிவிட்டேன் என்றும் இரவு நேரம் என்பதால் ஆட்டோ எதுவும் கிடைக்காமல் ஓட்டமும், நடையுமாக போனேன் என்றும் அதன் பின்பு அங்கு இருக்கிற எங்களது உறவுகக்காரர் மூர்த்தி மற்றும் சிலரிடம் நடந்த விசயத்தை சொல்லி அழைத்து வந்தேன் என்றும் நாங்கள் திரும்ப வீட்டிற்கு வந்தபோது எதிரியுடன் எங்கள் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தலையாரி மலைச்சாமி ஆகியோர்கள்

இருந்தார்கள் என்றும் அப்போது எதிரி அவர்களிடம் போலிஸ் ஸ்டேசனுக்கு அழைத்துச் செல்ல சொன்னார் என்றும் பின்பு சிறிது நேரத்தில் அவர்கள் என் மகனை அண்ணாநகர் போலிஸ் ஸ்டேசன் அழைத்து செல்வதாக சொல்லிச் சென்றார்கள் என்றும் சிறிது நேரத்தில் போலிசார் வந்தனர் என்றும் என்னை விசாரித்துவிட்டு எனது கணவரின் உடலை ஆம்புலன்ஸில் வைத்து அனுப்பி வைத்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி எனது மகன் என்பதால் உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை :** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

M
UDHAYAVELAVAN

Digitally signed by M
UDHAYAVELAVAN
Date: 2026.08.04 19:08:34
+0530

நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.